விவிலிய ஒளியில்

# பிரம சூத்திரம்

பேராசிரியர் முனைவர் யா.தா. பாசுகரதாசு
M.A., M.Ed., M.A., M.Phil., Ph.D ; Cert. in Sanskrit

நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்
முன்னாள் தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்
(Narsanror Institute of Leadership Training-NILT)
508, 22ஆம் தெரு, பெரியார் நகர், கொரட்டூர்,
சென்னை-600 080. தொ.பே. : 26871563

## நூலின் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விவிலிய ஒளியில் பிரம சூத்திரம் |
| நூலாசிரியர் | : | பேராசிரியர் முனைவர் யா.தா. பாசுகரதாசு |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | மார்ச்சு, 2004 |
| இரண்டாம் விரிவாக்கப் பதிப்பு | : | பிப்ரவரி, 2013 |
| பதிப்பு உரிமை | : | நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்<br>முன்னாள் தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம் |
| அச்சுத்தாள் | : | |
| நூலின் அளவு | : | 13.5 X 22 செ.மீ |
| எழுத்து வடிவம் | : | அளவு 12 |
| மொத்தப் பக்கங்கள் | : | 144 |
| படிகள் | : | 1000 |
| ஒளியச்சு | : | நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம் |
| அச்சிட்டோர் | : | மெய்ப்பொருள் அச்சகம்<br>சென்னை - 600 023.<br>தொலைபேசி : 044 - 26471526 |
| வெயீட்டோர் | : | நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்<br>508, 22ஆம் தெரு, த.வீ.வ. வாரியம்,<br>கொரட்டூர், சென்னை-600 080.<br>தொலைபேசி : 044-26871563<br>**E-mail : thomavedanta@niltindia.org**<br>**Website : www.niltindia.org** |
| பொருள் | : | சமயம் |
| விலை | : | |

*Our gratitude and heartfelt thanks to*

***New Beginning Christian Fellowship***

***California.***

***G.J.Pandithurai,* NILT**

# பதிப்புரை

நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம், இந்தியாவைக் கிறித்துவுக்குள் கொண்டு வர வேண்டும் என்னும் தொலைநோக்குடன் ஊழிய வாஞ்சையுடைய நண்பர் சிலரால் அமைக்கப்பட்டதொரு நிறுவனம் ஆகும். எந்தவொரு நிறுவனத்தையும் சாராத சபைப்பாகுபாடற்றது.

இந் நிறுவனம் வேதாகம கல்லூரி, கிறித்தவக் குருமார், நற்செய்தியாளர், இறை தூதர், திருச்சபை உறுப்பினர் போன்றோருக்குப் பயிற்சி அளித்து இயேசு பெருமானின் இறுதிகட்டளையை நிறைவேற்றுவது. இந்திய மறைநூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றை அடித்தளமாகக் கொண்டு இக்கட்டளையை நிறைவேற்றுவது. திருவிவிலியம் இந்திய வேதங்கள், வேதாந்தம் தமிழ்ப்பக்தி இலக்கியங்கள் முதலிய ஆய்வுத்திட்டங்களில் பங்கேற்பதுடன் அவற்றை ஒழுங்கு செய்து இந்தியவியல் சார்ந்த கல்வியின் வாயிலாக மறைந்துள்ள கிறித்துவை வெளிக் கொணர்ந்து இந்தியப் பண்பாடு, கோட்பாடுகள் முதலியவற்றின் அடிப்படையில் நற்செய்தியைப் அறிவிப்பது எனும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இந்தியச் சமய, மெய்ந்நூலியல் இலக்கியங்களில் இயேசு கிறிஸ்துவே மெய்யான ஒளியாய் மையங்கொண்டிருக்கிறார் என்னும் கருத்தை நிறுவனத்திற்குப் பயிலவரும் மாணாக்கரோடு பகிர்ந்து கொண்ட பின் அவர்களை அருட்பணியில் வழி நடத்தும் நோக்கம் நிறைவேறுவதைக் கண்டு பேருவகை கொள்ளுகிறோம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்".

பிரஸ்தானத் திரயத்தில் ஒன்றான "பிரமசூத்திரத்"திற்குப் பலர் உரை எழுதியிருந்தாலும் நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனத்தின் துணைத் தலைவர் – பாடத்திட்ட இயக்குனருமான முனைவர் யா.தா.பாசுகரதாசு அவர் தம் முனைவர் பட்ட ஆய்வில், பிரம சூத்திரம் இயேசு கிறிஸ்துவையும் விவிலியக் கருத்தையும் மையமாகக் கொண்டுள்ளதைக் கடவுளருளால் வெளிப்படுத்தியுள்ளார். தம்மைத் தம் அன்பருக்கு வெளிக்காட்டிய பிரமன் எம்பெருமான் இயேசுவின் அருளைப் போற்றி வணங்குகின்றேன்.

அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகத் தான் தெரிவு செய்த அறுவகைத் தரிசனங்களும் தமிழர் சமயமும் (விவிலிய ஒளியில்) என்னும் ஆய்வுத் தலைப்பிற்குரிய அடிப்படை நூல்களில் பிரம சூத்திரமும் ஒன்று.

பிரம சூத்திரம் என்னும் நூலை அறிந்தவரும் அதைக் கற்பவரும் மிக அருகியே காணப்படுகின்றனர். விவிலியத்தோடும் கிறித்தவத்தோடும் இதனை ஒப்பிட்டு ஆய்ந்தபோது புதுப்புது உண்மைகளை இறைவன்

வெளிப்படுத்துகின்றார். அவருக்கே எல்லாப் புகழும் நன்றியும் உரியன. கிறித்தவர்களும் இந்நூலைக் கற்க வேண்டும் என்னும் என் அவாவிற்கு இச்சிறு நூல் தூண்டுகோலாக அமையும் என்பது என் நம்பிக்கை.

நம் இந்திய நாட்டில், பிரம சூத்திரத்தில் இயேசுவே கருவாய் உள்ளார் என்னும் உண்மை வழியையும் சத்தியத்தையும் அறிவித்து, "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்னும் திருமறை வாக்கினைத் தலைமேற்கொண்டு, "விவிலிய ஒளியில் பிரம சூத்திரம்" என்னும் இவ் அரிய நூலைத் தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம், அதன் மற்ற ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.அ.சா.இராசசேகரன், திரு.இரா. சௌந்தரராசன், திரு.யூஜின் ஜோசப், திரு.க.விசயகாந்த், திருமதி. ஆஷா சிரிதர், திரு.இராம.பழனியப்பன் ஆகியோரின் உறுதுணையுடன் வெளியிடுவதில் எல்லாம் வல்ல கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இம்முயற்சிக்கு துணை நின்ற முனைவர் அலெக்சாண்டர் ஹாரிஸ் அவர்களுக்கும், இந்தப் புத்தகத்தின் வெளியீட்டிற்கு உதவிய புதிய துவக்கக் கிறித்த ஐக்கியத்தின் **(New Beginning Christian Fellowship, California)** ஆட்சிக்குழு உறுப்பினர்கள், அங்கத்தினர்கள் அனைவருக்கும் எம்பெருமான் இயேசுவின் எண்ணிலடங்கா ஆசீர்வாதங்கள் உரித்தாகுக ! என்று தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம் உங்களை உளமாற வாழ்த்துகிறது.

கடவுள் நம்பிக்கையுடையோர் உண்மை ஒளியைக் கண்டு கொள்ளவும், ஆன்மீகவாதிகளுக்கும், ஆய்வாளருக்கும் ஒரு கையேடாகவும் நிச்சயம் இந்நூல் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இப் புத்தகத்தை தட்டச்சு செய்து, அழகாக வடிவமைப்பும் செய்து கொடுத்து, பெருந்துணை நின்று எங்கள் எல்லா புத்தகத்திலும் முழுமனதோடு ஒத்துழைத்த அன்புச் சகோதரி ச. பத்மாவதி அவர்களுக்கு இந்நிறுவனம் நெஞ்சார்ந்த நன்றியை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறது. இயேசுவின் ஆசி அவர்களுக்கும், ஒத்துழைப்பு தந்த அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் உரித்தாகுக.

இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய மெய்ப்பொருள் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

திரியேக கடவுள் தந்தை, மகன், தூய ஆவிக்கே துதி, கனம், மகிமை உரித்தாகுக.

அன்புடன்,
**கா.ச. பாண்டித்துரை**
நிறுவனர், தலைவர்
தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்

# முன்னுரை

திராவிடக் கருத்து முறை மரபில், உபநிடதங்கள் தனி இடம் வகிக்கின்றன. உபநிடதங்களை வேதாந்தம் எனக் குறிப்பிடுவது மரபு. உபநிடதங்களின் பிழிவாக விளங்குவதே பிரம சூத்திரம் என்பர். உபநிடத நூல்களை இலக்கியமாகக் கொண்டால், பிரம சூத்திரத்தை இலக்கணமாகக் கொள்ளலாம்.

> "எள்ளின் நின்று எண்ணெய் எடுபடுவது போல்
> இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்"

என்பதற்கேற்ப, பிரம சூத்திரம் என்னும் இலக்கண நூல் தோன்றுவதற்கு உபநிடதங்கள் முதலான இலக்கியங்கள் மூலநூல்களாக விளங்கின எனலாம். "உபநிடதங்களின் தொகுப்பாகிய பாற்கடலைக் கடைந்தெடுத்து அதில் தோன்றிய அமிழ்தமே பாதராயணரின் (வியாசர்) வார்த்தைகள்'' என இராமானுசர் குறிப்பிடுகிறார்.

பிரம சூத்திர நூற்பாக்கள், செவ்வியல் சமசுகிருத மொழியில் அமைந்துள்ளன. இந்நூற்பாக்களும் செம்மையான பொருள் தரும் வகையில் அமையாமல், சிறு சிறு தொடர்களாகவும், மிகவும் சுருக்கமாகவும், தெளிவற்றனவாகவும் அமைந்துள்ளன.

உபநிடதங்களுக்கு "**வனநூல்கள்**" என்னும் பெயரும் வழங்கப்படுகிறது. அவை காடுகளில் கமுக்கமான அமர்வுகளில் மாணாக்கருக்குக் கற்பிக்கப்பட்டன என்பர். அங்ஙனம் ஏற்கெனவே இத்தகு அமர்வுகளில் கற்ற மாணாக்கர், மனத்தில் தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும், அவர்களுக்குக் குறிப்புரை வழங்கும் வகையிலும் பிரம சூத்திரங்கள் அமைந்துள்ளன எனலாம். இக்குறிப்புரைகள், பாடங்கேட்ட மாணாக்கர்க்கு, ஏற்கெனவே அவர்கள் ஆசிரியர்களிடம் அமர்ந்து தெளிவாகக் கற்றுக் கொண்டமையால், விரிவாகச் சொல்லப்படத் தேவையற்றவையாகி விட்டன என்பர். இத்தகு பின்னணியில் பிரம சூத்திரம் இயன்றதாகலாம்.

இந்திய மெய்ந்நூலியலில் (**Philosophy**) சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை ஆகியன அறுவகைத் தரிசனங்கள் எனப் போற்றப்படுகின்றன. தரிசனம் என்பதற்குக் காட்சியியல் என்பது பொருள். இக்காட்சியியல் நூல்கள் ஆறனுள்ளும் பூர்வ மீமாம்சை எனப்படும் மீமாம்ச சூத்திரங்களைச் சைமினி என்பார் இயற்றினார். இந்நூல் வைதீக நெறி சார்ந்தது. இது நீங்கலாக உள்ள ஐந்து தரிசனங்களும் திராவிட நெறி சார்ந்தவை. எனவே இவற்றைத் '**திராவிடத் தரிசனங்கள்**' அல்லது '**திராவிடக் காட்சியியல்**' என அழைப்பதே பொருத்தமானதாகும்.

இவ்வைந்தனுள்ளும், பிரம சூத்திரங்கள், பரம்பொருளாகிய கடவுளைப் பற்றியும், ஆன்மா பற்றியும், அதன் விடுதலை பற்றியும், முத்திநிலை முதலியன பற்றியும் மிகுதியும் பேசுகிறது. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றிச் சைவ சித்தாந்தம் எங்ஙனம் விரிவாகப் பேசுகிறதோ, அவ்வாறே, அதே பொருள்களைப் பற்றிப் பிரமசூத்திரம் மிகச் சுருக்கமாகவும், நுட்பமாகவும் பேசுகிறது. இதனாலேயே, "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்னும் விளக்கம் எழுந்தது.

சைவ சித்தாந்தம் என்பது விவிலியத்தின் விரிவாக்கம் என்று அறிஞர் பலரால் நிலை நாட்டப்பட்டுள்ளது. வேதாந்தம் என்பதும் விவிலியத்தின் மையப் பொருளைக் கொண்டே இயங்குகிறதென்பதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. 'விவிலிய ஒளியில் பிரம சூத்திரம்' என்னும் இச்சிறு நூலைக் கற்பார்க்கு ஓராற்றான் அது தெளிவாகும்.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

விவிலிய ஒளியில் பிரம சூத்திரம் என்னும் நூல் 2004ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்தது. எட்டாண்டுகள் கழித்து விரிவாக்கம் பெற்ற நூலாக இரண்டாம் பதிப்பு இப்போது வெளிவருகிறது.

இந்நூலின் முதலாம் பதிப்பு ஒரு சிறு நூலாகவே இயற்றப்பட்டிருந்தது. எனினும், திருவிவிலியத்தின் இறையியற் கருத்துகள், பிரம சூத்திரத்தின் மையக் கருத்துகளாய் எங்ஙனம் அமைந்துள்ளன என்பன பற்றி அந்நூலில் சுருக்கமாகவே விளக்கப்பட்டிருந்தன. கிறித்தவ இறையியல் கற்ற மாணாக்கரையும் அறிஞர்களையும் அந்நூல் கவர்ந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிறித்தவத் தமிழ் இலக்கிய இருக்கையின் மேனாள் பேராசிரியர் முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்கள், “This book is a stem of a research” இதை நீங்கள் இன்னும் விரித்து எழுத வேண்டும் என்று என்னிடம் அடிக்கடி கூறி வந்தார்கள்.

அறிஞர்களை மனத்தில் கொண்டு அவர்களுக்காக எழுதாமல், சாதாரண மக்களும் பிரம சூத்திரத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதித் தர வேண்டும், என்று என்னிடம் கூறி வந்தனர். நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனத்தின் மூலம் இறையியற் கல்லூரிகளிலும் பல்வேறு திருச்சபைகளிலும் கற்பிக்கின்ற போதெல்லாம், அங்குக் கலந்து கொண்டு கற்றுக் கொண்டவர்களும் மேற்படி நூலை மறுபதிப்புச் செய்யும் போது எளிய முறையில் பிரமசூத்திரத்திற்கு விளக்கம் தர வேண்டும் எனப் பல்லாற்றானும் என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

இவர்களின் விருப்பத்தை ஓரளவு நிறைவு செய்யும் வகையில் இந்த இரண்டாம் பதிப்பு எழுதப் பெற்றுள்ளது. இப்பதிப்பில்,

1. பிரமன் ஏன் உலகப் படைப்பாளராகக் குறிக்கப் பெறுகிறார் ?
2. பிரம சூத்திரம் ஏன் சாரீரக மீமாம்சை என்று குறிக்கப் பெறுகிறது ?
3. பிரம சூத்திரம் விளக்கும் பிரமன் யார் ?

என்னும் மூன்று தலைப்புகள் இப்பதிப்பின் முற்பகுதியாக அமைகின்றன.

இம்மூன்று தலைப்புகளும் பிரம சூத்திரத்தின் அடிப்படைகளை அறிந்து கொள்ளத் துணைபுரியும் வகையில் எழுதப்பட்டுள்ளன. பலரும் என்னிடத்தில் வெளிப்படுத்திய விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் எளிமை கருதி மேற்குறித்த தலைப்புகளின் கீழ்வரும் கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. பிரம சூத்திரம் என்பது இறையியல் கருத்துகளை விளக்கும் நூல், ‘கதையைப் படிப்பது போல இயையிலலைப் படிக்க முடியாது’ என்னும் கருத்தைச் சிந்தையில் நிறுத்திக் கொண்டு, இந்நூலைப் படிப்பார்க்கு, இந்நூலின் எளிமை விளங்கும்.

முதற்பதிப்பில் வெளியான பழைய நூற்பகுதி இப்பதிப்பில் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் முன்னர் இருந்தபடியே அச்சாகியுள்ளது.

பிரம சூத்திரத்தை இந்திய மக்கள் ஆழ்ந்தும் முழு விருப்பத்துடனும் கற்க வேண்டும். நம் மக்கள் முழு ஆன்மீக விடுதலை பெற வேண்டும். சமற்கிருதம் கற்ற பண்டிதர் மட்டுமே இந்நூலைக் கற்க முடியும் என்னும் நிலை மாற வேண்டும்.

திராவிடரால் உருவாக்கப்பட்ட மொழி சமற்கிருதம். ஆனால் ஆரியரின் மொழி அது என்று பலராலும் தவறாகக் கருதப்பட்டு, ஆரியர் வசமாகி விட்டது! இந்து மதம், திராவிடரால் திராவிட நாட்டில் உருவாக்கப்பட்டது. ஆனால், அது ஆரிய மயமாகி, திராவிடரையே அடிமைப்படுத்தும் கருவியாக அது மாறி விட்டது! இந்துக் கோயில்களெல்லாம் திராவிடரால் கட்டப்பட்டவை. ஆனால், கட்டியவர்கள், சூத்திராகவும் பஞ்சமராகவும் தாழ்த்தப்பட்டு, தம் கோயிலுக்குள் நுழையவும் கருவறைக்குள் செல்லவும் போராட்டம் நடத்தும் இழிநிலை இந்தியாவில் நிலவுகிறது. பிரம ஞானம் பெறத் திராவிடன் தகுதியில்லாதவனாகச் சாத்திரங்களால் ஒதுக்கப்பட்டு விட்டான் ! இதுவா இந்தியர்களின் ஆன்மீகம் ?

இயேசு கிறித்து, கிறித்தவ சமயத்திற்கும் கிறித்தவர்களுக்கு மட்டுந்தானா சொந்தக்காரர் ? கிறித்து உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் சொந்தக்காரர். அவர் காட்டிய ஆன்மீகம் உலக மக்கள் அனைவருக்கும் சொந்தம்!

பிரம சூத்திரம் காட்டும் ஆன்மீகம் இயேசு கிறித்து காட்டும் ஆன்மீகத்தைச் சார்ந்தது. பிரம சூத்திரத்தில் விளக்கப்பட வேண்டிய பகுதிகள் இன்னும் உள்ளன. இந்நூலின் கண் விளக்கி உள்ள பகுதிகள் முடிந்த முடிவுகள் அல்ல! நிறைவான பகுதிகள் இன்னும் வெளிவர வேண்டும். இறையருளே அவற்றை எதிர்காலத்தில் வெளிப்படுத்த வேண்டும்.

இம்முயற்சிக்குத் துணை நின்ற தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனத்திற்கும் அதன் தலைவர் கா.ச.பாண்டித்துரை அவர்களுக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

இதனை எழுதுங்கால் நல்ல சூழ்நிலையை இல்லத்தில் உருவாக்கிக் கொடுத்த என் துணைவியாருக்கும் என் நன்றி.

அவனருளாலே அவன்தாள் வணங்கி இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்,

யா.தா. பாசுகரதாசு,
துணைத் தலைவர் – பாடத் திட்ட இயக்குநர்,
நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அப். | அப்போஸ்தலர் நடபடிகள் |
| ஐத.உப. | ஐதரேய உபநிடதம் |
| உரோ. | உரோமையர் (உரோமர்) |
| கலா. | கலாத்தியர் |
| கொ. | கொரிந்தியர் |
| சத.பர. | சதபத பரமாணம் |
| சாந்.உப. | சாந்தோக்கிய உபநிடதம் |
| தொ.நூ. | தொடக்கநூல் (ஆதியாகமம்) |
| திருவெளி/வெளி | திருவெளிப்பாடு/வெளிப்படுத்தல் |
| தை.உப. | தைத்திரிய உபநிடதம் |
| பி.சூ. | பிரமசூத்திரம் |
| பிரு.உப. | பிருகதாரணியக உபநிடதம் |
| பேது. | பேதுரு |
| மே.ப. | மேற்படி நூல் |
| யோ. | யோவான் |
| லூக். | லூக்கா |

# பொருளடக்கம்

## முதல் பகுதி


| | பக்கம் |
|---|---|
| 1. உலகப் படைப்பாளராக ஏன் பிரமன் குறிக்கப்படுகிறார் ? | 13 |
| 2. பிரம சூத்திரம் ஏன் சாரீரக மீமாம்சை என அழைக்கப்படுகிறது ? | 41 |
| 3. பிரம சூத்திரம் குறிப்பிடும் பிரமன் யார் ? | 52 |


## இரண்டாம் பகுதி


| | |
|---|---|
| பிரம சூத்திரம் | 77 |
| நிறைவுரை | 105 |
| சான்றெண் விளக்கம் | 106 |
| துணை நூற்பட்டியல் | |
| தமிழ் நூல்கள் | 109 |
| ஆங்கில நூல்கள் **(English Books)** | 113 |